புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சுப்புரெட்டியாரின் மொழிபெயர்ப்பு திறன் வெளிப்பாட்டில் வேமனார்

*திரு. ச . சரவணக்குமார்,*
*உதவிப் பேராசிரியர் ,தமிழ்த்துறை,*
*பிஷப் அம்புரோஸ் கல்லூரி, இராமநாதபுரம், கோவை 45.*

*ஆய்வுச்சுருக்கம்*

*வறண்டு உயிரோட்டம் இல்லாத சமூகத்தின் மூளைக்கு நுண்ணறிவு ஊட்டி துணிவாகச் செயல்படுத்தும் உணர்ச்சிமிக்க மனவெழுச்சிச்சிந்தனையாளரான வேமனார், புராணங்களால் உயிருட்டப்பெற்ற சிலை உருவவழிபாட்டைக் கண்டித்து, பிரிவினையை உண்டாக்கும் பலதெய்வ வழிபாட்டை எதிர்த்து எல்லா உயிர்களுக்கும் பொதுவாகக் கூறப்படும் ஒரு தெய்வவழிபாட்டுக் கோட்பாட்டினை முன்வைத்து பேசுகின்ற முறையான மனித ஒருமைப்பாட்டுக் கொள்கையை முன்னிறுத்தும் கவிஞராகத் திகழ்கின்றார்.*

*சாதி வேறுபாடுகளை உண்டாக்கி மனிதனுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி, அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும், மற்றும் எப்படிப்பட்ட அதிகார வர்க்க உயர்நிலையில் இருப்பினும் அவர்களுக்குள்ளும் பொருளாதார அடிப்படையில் பின்தங்கி மக்கள் அனுபவிக்கின்ற பிரச்சனைகளையும், மனித இனமான ஆண்,பெண் வேறுபாட்டு அடிப்படையிலும் ஒடுக்கப்படும் சமமின்மைகளைப் பற்றியும் பேசுகின்ற இவரின் சீர்திருத்தக் கவிதைகளால் விழிப்புணர்வு உண்டாகிறது. மேலும் இவர் தத்துவ அறிஞராகவும், வாழ்க்கையையும், அதன் உலகியல் பற்று அறிவையும் ஆன்மீக இயல் பற்றிய பிரச்சனைகளையும் ஆழ்ந்து சிந்தித்துத்தீர்வுகாணும் ஆற்றலைக் கற்பிக்கும் சிந்தனையாளராகவும். ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கேற்ப சந்திக்கும் பிரச்சனைகளையும் ஒரு மனிதன் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற வாழ்வியலைக்கற்பிக்கும் ஞானியாகவும் இருக்கும் இவரின் தனித்துவம் இக்கட்டுரையில் காட்டப் பெறுகின்றது.*

*தான் வாழ்ந்த காலகட்டத்தில் இருட்படலம் சூழ்ந்த நிலையில் மக்கள் துயரப்பட்டு நலிவுற்ற காலத்தில் வேமனார் இவற்றையெல்லாம் எதிர்த்துக் கருத்துரைப்பதிலும், கண்டித்துக் கடுஞ்சொற்களை அதிகாரத்தின் மீது வீசும் தைரியமான தனிஒருவராக இவர் செயல்பட்டுள்ளார். இவர் அன்னையின் அன்புநிலையை முன்வைத்துப் பேசும் அன்புடையவராகவும், குடிமைப்பண்பு உடையவராகவும் , பொறுமையுடன் செயல் பட்டிருப்பதும் நாம் இவரின் வரலாற்றுப்படைப்பு மூலம் அறிய முடிகிறது.*

*இந்தியாவின் தலை சிறந்த தத்துவக்கவிஞர்களில் ஒருவராக இவர் இருந்துள்ளார் என்பது ஆய்வின் மூலம் புலனாக்கப்படுகிறது. உலகியல் சார்ந்த பல தரப்பட்ட சிந்தனைச் சீர்த்திருத்தஞானியாகத் திகழ்ந்தவரின் சிந்தனையோட்டங்களின் தனிக்கோட்பாட்டுச்சாரத்தை மிதித்தெறிந்த மேல்தட்டு சமயவாதிகளின் அதிகார ஆதிக்க முறையால் மறைக்கப்பட்ட சமூக மெய்விளக்க அறிஞரான வேமனரின் தத்துவங்கள் எல்லாகாலங்களுக்கும், எல்லாநாடுகளுக்கும் தேவையான செய்தியைக் கொண்டவராகத்திகழ்கின்றார் என்பதை கண்டுணர்ந்தார் ந.சுப்புரெட்டியார். நடுநிலையோடு இயல்பான தமிழ்ச்சொல் எழில் நயத்தோடு அன்றைய சமூகப்பண்பாட்டுச் சமயச்சூழல்களை மாற்றாது இன்றைய சமூகச்சீர்திருத்த மாற்றத்துக்கு ஏற்ப வேமனரின் வாழ்வியலை வெளிக்கொணர்ந்து காட்டி உள்ளதால் இதை உணரும் சமூகம் புதிய வெளிச்சத்தையும் அதன் வழியில் புதிய தடயங்களையும் பதித்து இவ்வுலகிற்கு நிலையான ஒருமை மாற்றத்தைக்காணும் என நம்பியே சுப்புரெட்டியார் தன் மொழிப்பெயர்ப்புத்திறனை மிக எளிமையாக*

*வெளிப்படுத்தியுள்ளார். இந்நூலின்வழி ஆதிக்க எல்லைகளைத் தாண்டி சமூகத்திற்கு வேமனாரின் மறைமெய்மைகளைக் கொண்டு சேர்ப்பது ஒரு மாற்றத்தை உருவாக்கவல்லது என்பதைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*குறிப்புச் சொற்கள்- வேமனார், சுப்புரெட்டியார், மொழிப்பெயர்ப்புத்திறன், தனிக்கோட்பாட்டு, ஒரு தெய்வவழிபாட்டு*

*முன்னுரை*

*இயற்கையோடு இயற்கையாக சிந்தனையிலும் செயலிலும் எவ்வித வேறுபாடும் அறியாமல் இவ்வுலகம் அளித்த இயற்கையான வாழ்க்கையில் ஒற்றுமையுடன் ஒரே கூட்டமாய் வாழ்ந்து கொண்டிருந்த மனித இனம் நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் தங்களுடைய செயல்கள் எல்லாவற்றிலும் கடவுள் தொழில், பொருள், வீரம் போன்ற பிரிவுகளில் அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்ப பிரித்துக் கொண்டனர் . பின்பு சாதியம் சமயம் என்ற மிகப் பெரிய தூண்களை உருவாக்கி தங்களுக்கான இடங்களை உருவாக்கி கொண்டனர். இப்படியான பிரிவுகளை சாதகமாக்கிக் கொண்ட அதிகார வர்க்கத்தின் அத்துமீறல்களை தகர்தெறிய வந்த பல சீர்திருத்தவாதிகள் வருகையிலே சிறிய அளவு மனித நேயமவாது இங்கு ஒட்டிக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட சீர்திருத்தவாதிகளில் மெய் விளக்கயறிஞரான வேமனாரின் கருத்துக்கள் கலக்காரர்களை கலங்கடிக்க செய்தது, இவரின் பேச்சும் செயலும் அதிகார வர்க்கத்தின் ஆணிவேரை அசைய வைத்தது. சமுதாயத்தில் ஒற்றுமையை நிலைநாட்டி மக்களுக்கிடையே சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் மனித நேயத்தை நிலைபெறச் செய்வதே தன் குறிக்கோளாக வைத்தே செயல்பட்டார்.*

*சாதியம்*

*இயல்பான வாழ்க்கை நிலையிலே "சாதியம்" எனும் விதையை விதைத்து அதில் கட்டமைப்புகளை பல மரமாய் வாழையடி வாழையாக, பரம்பரை தொழில் முறைகள், சமய அமைப்பு முறை, சாதி பகுப்பு முறைகள், தங்களுக்குரிய பண்பாட்டு முறைகள் என அனைத்தையும் தங்களுக்குள் உள்ளடக்கிக் கொண்டனர்.இப்படிப்பட்ட சாதிய கட்டமைப்புகளைத தளிர்க்க செய்து இதனையே தங்களுக்குரிய அரணாகவும் வைத்துக்கொண்டு அடக்குமுறைகளையும்,ஆதிக்கம் முறைகளையும் செயல்பட வைத்தனர்.அதிகார வர்க்கத்தினரின் கட்டமைப்பால் கீழ்த்தட்டு மக்கள் மீள முடியாத அளவிற்கு சாதியத்தை வளர்த்தெடுத்தனர்.இந்த வளர்ப்பால் மக்கள் தங்களுடைய உரிமைகளையும் உணர்வுகளையும் விட்டு எத்தனை இன்னல்களையும் கொடுமைகளையும் அனுபவிப்பார் என்று சாதிய காரர்களை நோக்கி தன்னுடைய வாய்வீச்சு கவிதைகளால் அவர்களைக் கடுமையாகத் தாக்கி சாதியத்துக்கு எதிரான சமத்துவத்துக்கு ஆதரவாக தன்னுடைய கருத்தை விடாது சமூகத்தில் ஒலிக்கச் செய்பவர்களின் மத்தியில் வேமனார் மிக முக்கியமானவராக அவர் வாழ்ந்த சமூக சூழலில் காணப்பட்டார்."சாதிய முறை அமைப்பினை நிலை நிறுத்த முயல்வார்களிடம் விடாது போரிடும் ஒரு சமூக கலகக்காரர்" (பக்:8-வே-சுப்.ரெ) சாதியம் என்ற ஒற்றை கருவியை கொண்டு பிரிவினைகளை ஏற்படுத்தும் கட்டுகளை அவிழ்த்து மக்களை சுதந்திரமாக ஆக்கி சமூகத்தில் எங்கும் எதிலும் சுதந்திரப் பறவையாக பறக்க வைக்க அவர்களுக்கு தேவையான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு ஊர் ஊராக, தெருத் தெருவாக ,வீடு வீடாக சென்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தையே முழு மூச்சாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுக்க அதனை அர்ப்பணித்து ஒரு சமூக சீர்திருத்த கலகக்காராகத் திகழ்ந்துள்ளார் .*

*தங்களுக்கான ஒரு நிலையான அதிகார இடத்தை உருவாக்க நினைக்கும் இவர்களின் திட்டங்களுக்கு சாதியம் என்பதை ஒரு கருவியாகக் கொண்டு மக்களுக்கிடையே வேற்றுமை எண்ணத்தை நிலைநாட்டி அதில் குளிர்காயும் அதிகார வர்க்கத்தின் கட்டமைப்புகள் சிறியோர் பெரியோர் என்று பேதம் பாராமல் தீட்டு கொடுமைகளும் மனிதநேயமற்ற வன்கொடுமைகளும் இழைக்கப்பட்டன. இவை திடீரென்று வந்தவை அல்ல வழிவழியாக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். "நம்முடைய சாதி அடிப்படையிலான இந்தியா வெறும் வர்க்கங்களாகப் பிரிந்து கிடக்கும் சமூகமல்ல. இது சாதி அடுக்குகளாலான சமூகம் தோற்றுவித்த வர்க்கங்களைக்*

கொண்டதாகும்" (பக்.10உ நாக கால.சாதிய சமூகம்) சமூகத்தை தங்களுடைய ஆளுமைக்கும் ஆட்சிக்கும் கீழ் தான் இருக்க வேண்டும் என்று நினைக்கும் ஆதிக்கவாதிகளின் மாயை திரை என்றே கூறலாம்." ஊற்றிடும் சாதியின் பூசலார் மாயையே" (பக்:91- வே-சுப்.ரெ)

ஒருவனை மேல் கீழ் என்று பாரபட்சம் பார்ப்பது அவன் குணத்தை அடிப்படையாகக் கொண்டே தவிர சாதியை பிறப்பை வைத்து மதிப்பிடக் கூடாது என்று சமத்துவத்தை நோக்கி சமுதாயத்தை கொண்டு செல்ல நினைத்தவரே வேமனார், "முக்கியமாக இருக்க வேண்டியது ஒருவனுடைய நடத்தை அன்றி சாதி அன்று " (பக்:67- வே-சுப்.ரெ) என்கிறார் வேமனார். ஒரு மனிதன் பிற மனிதனை பார்க்கின்ற போது அவனின் தோற்றமும் சாதியும் சமயமும் தெரியாமல் அவனுடைய ஒழுக்கநெறி நடத்தைகளை வைத்தே அவன் மதிக்கப்பட வேண்டும் என்பதே வேமனாரின் கருத்தாகும். பிறருக்கு கெடுதல் நினைக்கும் எண்ணம் கொண்டு இருப்பவன் எப்படிப்பட்ட உயர் குலத்தை சார்ந்தவனாக இருந்தாலும்,அவன் தீண்டத்தகாதவன் ஆகவே கூறுகின்றார். கீழ் குலத்தை சார்ந்தவனாக கூறப்படும் ஒருவர் நல்லறம் சார்ந்து மட்டுமே செயல்படுவதாக இருப்பின் அவன் பல மடங்கு உயர்ந்த மனிதனாக கருதப்பட வேண்டுமென சாதிய நிலையை நல்லறத்தை உள்ளடக்கி எடுத்துரைக்கின்றார்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்" (தி.கு: 133) திருவள்ளுவரின் கருத்தும் வேமனாரின் கருத்தும் நிலைகளும் ஒன்றி இருப்பதை காணலாம்.இப்படியாக மனிதனை எதிர்த்து மனிதனே மேற்கொண்டுவரும் மிகக் கொடிய குற்றமாக தீண்டாமை எதிர்த்துப் போராடி குரல் கொடுக்கும் ஒரு சீர்திருத்தவாதியான வேமனரின் அகத்தை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் சுப்புரெட்டியார்.

பொருளாதார நிலை:

பொருளாதார அடிப்படையாக ஒரு மனிதன் மதிக்கப்படுவது என்பது சாதியை விட மிகக்கொடுமையானதாக கருதப்படுவது ஒருவன் மேல்சாதி ஆக இருப்பினும் ஏழையாகவும் பணமில்லாதவர்களாக இருப்பின் அவர்கள் கீழ்நிலை வைத்தே ஒதுக்கப்படுகிறார்கள். இதை போலவே மிகவும் தாழ்த்தப்பட்ட சாதியாக கூறப்படுபவர்கள் பணம் படைத்தவராக இருந்தால் அவர்கள் முதன்மையானவராகவும் சிறப்பு பெற்றும் இருக்கின்றார்கள். "எவ்வளவு தாழ்ந்த சாதியினராக இருந்தாலும் பணக்கார முதன்மையாக திகழ்கின்றார் அதற்கு நேர்மாறாக எவ்வளவு உயர்ந்த சாதியினராக இருந்தாலும் ஏழையாய் இருப்பவர் ஊக்கம் குன்றிப் போகிறார் என்கின்றார்" (பக்:67-வே-சுப்.ரெ) பணம் இல்லாமல் வறுமையில் உள்ள உயர்ந்த சாதிக்காரர் பணம் படைத்த தொழிலதிபரான கீழ் மக்களுக்கு அடிமையாகவே இருக்கின்றார்என்பதே உண்மையாகும்.ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் வறுமை என்பது வந்து விட்டால் அது மிகக் கொடியதாக இருக்கும் உறவுகளும் சுற்றத்தார் வாழ்க்கையின் மீது கசப்பான ஒரு நிலையை உண்டாக்கும் தருணங்களை உருவாக்கிக்கொள்ளும் "வறுமை என்பது ஒரு காட்டுத்தீ அது உங்களை;உங்கள் அன்புக்குரிய எல்லோரையும் அழிக்கின்றது.உண்மையில் வறுமை என்பது வழிகேடாகும்" (பக்:68-வே-சுப்.ரெ) என்று எச்சரிக்கின்றனர் வேமனார்.

இப்படியான ஒரு கொடிய நிலைக்குத் தள்ளப்படும் ஒரு குடும்பத்தை அந்த சமூகத்தில் எந்த சாதியும் சமயமும் அதன் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய முடியுமா? இப்படிப்பட்ட நிலை உருவாக காரணம் என்ன? ஒரு சமூகத்தில் அதிக பணம் படைத்தவன் ஒன்றும் இல்லாதவன் எப்படி இருக்கமுடியும் இந்த நிலை பல நூற்றாண்டு காலமாக இருந்து வரும் மேலாதிக்க வர்க்கத்தின் சுரண்டு நிலையாகும். அதிகாரவர்க்கத்தின் சுரண்டலும் மேல் வரவிடாமல் தடுக்கும் தன்மையே இதற்கு காரணமாக இருக்கின்றது.வறுமை நிலைக்கான வருநிலையை உள்நோக்குடன் சிந்தித்து ஆராய்ந்து ஒரு விடையையும் முடிவையும் காண தேடி அலைபவராக இருக்கிறார் இதற்கான விடை என்பது கிடைப்பதும் கிடைக்கவிடுவதும் கடுமையான ஒற்றாக இருப்பது உணர்ந்து தான் அதற்கான தேடுதலில் ஈடுப்பட்டார் வேமனார். "ஒரு சிலர் பெருஞ்செல்வத்தில் புரளஏனைய பலரும் வாழ்க்கையில் அத்தியாவசிய பண்டங்கள் கூட இல்லாமல் தவிக்கின்றார்கள். பஞ்சையரும் வேலையற்றவரும் இருப்பது செல்வந்தரும் வேலைப் பெற்றோரும் இருப்பதன் விளைவே " (பக்:869 காரல் மார்க்ஸ்- மூலதனம்) அதிகாரத்தில் ஊறி அதனை தங்களுக்கான ஒரு இடமாகவும் அந்த இடத்திற்கு யாரும் வரவிடாமல் செய்வதே தங்கள் குறிக்கோளாக கொண்டு வர்க்க சுரண்டலை செயல்படுத்தியுள்ளனர் என்பது நன்கு

புலனாகிறது. நாம் வாழ்கின்ற வாழ்க்கையில் எந்த நேரமும், எத்தகைய பொருளும் , எந்த நிலையும் நிலையில்லாத ஒன்றாக இருக்கின்ற போது பிறப்பு முதல் இறப்பு வரை இருக்கின்ற அந்த வாழ்க்கையில் வரும் இன்பங்களை பிறருடன் பகிர்ந்து வாழ்வது என்பது மிக பேரின்பத்தை தரும் இன்ப வாழ்வாக இருக்கும். ஏதோ ஒரு சூழ்நிலையில் காரணமாக வறுமை நிலைக்கு தள்ளப்படுவார்கள்செல்வத்தில் நிறைந்து உள்ளவர்களை இரந்து கேட்பதும் ஒருவர் தன்னைத்தானே இழிவுபடுத்தும் செயலாகும்.வறியவர்களைக் கண்டால் அவர்களுக்கு தேவையானவற்றை செய்வதே மனித நேயம் ஆகும் இதுபோன்ற சமுதாயப் பொது செயல்களை செய்வதில் தான் மக்கள் ஆர்வம் கொள்ளவே வேண்டும் இதுவே சமத்துவத்தின் முதல்படியாக அமையலாம் என்பது வேமனருடைய கருத்து நிலைகளில் ஒன்றாக இருக்கிறது."செல்வந்தர்களை நோக்கிய தமது செல்வத்தை வறியவரோடும் தேவையிலிருப்போரோடும் பகிர்ந்து கொள்ளுமாறு வேண்டுகின்றார்" *(பக்:69-வே-சுப்.ரெ)* இப்படியான கொடைத்தன்மை குறித்து தெளிவுபட எடுத்துரைக்கின்றார்.

உழைக்கும் வழியும் முன்னேறும் வழியும் இருப்பின் அதன்படி உழைத்து முன்னேறலாம் " உடல் உழைப்பாக அமையுமானால் அது எல்லாவற்றிலும் சிறந்ததாகும் " *(பக்:69-வே-சுப்.ரெ)* உடல் உழைப்பால் உயர்கின்ற தன்மையை அவர் எடுத்துக் காட்டுகின்றார். பிறர் உழைப்பில் சுரண்டி தின்னாமல் அவரவர் உழைப்பால் உழைத்து உண்டு வாழ்வதும் தன் குடும்பத்தை பேணிக்காத்து வாழ்வதே உயர்வான வாழ்வினை தருவிக்கும் அது இன்றி சாதியையோ மதத்தையோ மையமாகக் கொண்டு வேர்வை துளிகளை சிந்தி உழைத்து உண்டு வாழாமல் பிறர் உழைப்பில் உண்டு வாழ்பவர்கள் என்றுமே விலங்கினை விட கீழே வைத்து பேசப்படுவர். "புரோகிதக் தொழிலுக்கும் அவர் நன்மதிப்பு தருவதில்லை. அங்ஙனமே வாணிகத்திற்கும் அவர் ஆதரவு காட்டுவதில்லை. தரகர் வாழ்க்கைத் தொழில் அல்லது சுரண்டல் தன்மையுள்ள தொழில் அவருக்கு வெறுப்பு தருவதாகும்." *(பக்:69-வே-சுப்.ரெ)* உடல் உழைப்பால் உழைத்து முன்னேறுவதே உயர்வையும் நன்மதிப்பையும் நமக்கு தருவிக்கும் என்பது இங்கு நன்கு புலனாகின்றது.

சமயநிலை:

சிறந்த சிந்தனையாளராக இருக்கும் வேமனார் ஒரு கவிஞராகவும் நல்ல மனிதராகவும் தத்துவ ஞானியாகவும் இருந்துள்ளார் என்பதை அறிய நாம் அவர் வாழ்ந்த காலத்தை சிறிதாவது ஒப்பிட்டு பார்த்தால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் தன் கண்ணு எதிராக நடக்கும் சமூக சூழ்நிலைகளை தன்வாழ்வோடு ஒன்றி தன் படைப்புகளையும் மனித இனத்தின் நிலைகளையும் படம் பிடித்து காட்டியுள்ளார் இவரது காலம் மிகக் கொடிய காலமாகத்தான் இருந்திருக்கக்கூடும் நாகரிகமற்ற மக்கள் தாழ்த்தப்பட்டு மேல் வர முடியாத அளவுக்கு இருள் சூழ்ந்த காலமாகத்தான் இருந்திருக்கக்கூடும். சமய நிலைகள்சமய சட்டங்களால் மூடப்பட்டு பல கட்டமைப்புகள் அவை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு காலத்தில் தான் அவரும் சமயத்தில் கால் ஊன்றினரர். ஆனால் அவரின் விரிந்த எண்ணத்திற்கும் சமத்துவ ஓட்டத்துக்கும் அங்கு எந்தவித சீர்திருத்த நோக்கங்களும் நன்மைகளும் கிடைக்காத திருப்தி வெளியேறினார் . பல தெய்வ வழிபாட்டை எதிர்த்து நின்றார் வேதம் என்ற பெயரில் கூறப்படும் பல பொய்களை ஏளனம் செய்தார் அது குறிப்பிட்ட வர்க்கத்துக்கு மட்டுமே உரியது என்று கூறும் கள்ளக் குருக்களை பற்றியும் இவர்களின் சுயலாபத்துக்காக மக்களுக்கிடையே பிரச்சனைகளையும் பிரிவினைகளையும் உண்டாக்குவ தையும் கண்டித்து குரல் எழுப்பினார் வேமனர். "ஒரு சைவரையும் ஒரு வைணவயும் ஒரே நேரத்தில் காலன் கொண்டு போனால் சைவரின் உடல் புதைக்கப் படுகிறது வைணவன் அவரின் உடல் எரிக்கப்படுகிறது என்ற வேறுபாட்டினை தவிர வேறு என்ன வேறுபாடு உள்ளது அப்படி இருக்கும் போது இறைவன் பெயரால் ஏன் சச்சரவு செய்து கொள்ளவேண்டும்?" *(பக்:50-வே-சுப்.ரெ)* மனிதனாய் பிறப்பெடுத்த அனைவருக்கும் உடலும் உறுப்பும் ஆன்மா என அனைத்தும் ஒன்றாக இருக்கும்போது அவனால் உருவாக்கப்பட்ட சாதி சமயத்தில்தான் மக்களுக்கிடையே பிரிவினைகளையும் அதனால் தீண்டாமைக் கொடுமைகளையும் ஏற்படுகின்றது. "மனிதர்களின் ஒற்றுமைக்கு பதிலாக மனிதனை மனிதன் பிரித்து காட்டவே மதம் உதவுகின்றது" (பக்:.239, பெரி. இ.எ)

மனிதனின் மதியினத்துக்கு எட்டி அளவுக்கு எத்தனை தெய்வங்களை உருவாக்கி கொள்ளவும் நெறிமுறைகளையும் சமயக் கருத்துக்களையும் ஏற்படுத்திக் கொள்ளவும் முடியுமோ

அந்த அளவுக்கு உருவாக்கி சுயநலத்தை புகுத்தி வழிபாட்டு முறைகளையும், மூடநம்பிக்கைகளையும் பாகுபாடாக விதைத்து பலன் பார்க்கின்றார்கள் இப்படிப்பட்ட சமயவாதிகள் எதிர்பார்ப்பால் நாடும் நாட்டு மக்களும் பாழ்க்கப்படுகிறார்கள் . மக்களும் பலியாடுகளாக ஆக்கப்படுகிறார்கள்."சிறப்பாக மக்களின் ஒழுக்கங்கள் குன்றி மக்களிடத்தில் மக்களுக்கும் அன்பும் உபகாரமும் இல்லாமல் இருப்பதற்கும் கடவுள் என்பதும் அதன் சமயமும் சமயாச்சாரியார்கள் என்பவர்களும் அவரது பாடல்களும் நெறிகளுமே காரணம் என்பதை வலியுறுத்தி கூறுகின்றேன்" (பக்:379 பெரி.இ.எ) எனவே பக்தி என்ற பெயரில் சமயவாதிகள் உண்டு பண்ணும் எண்ணற்ற கொடுமைகளை செய்வித்து இதுவே நியதி, இதுவே நன்மை என்று மக்களுக்கு ஒழுக்கக்கேடான செயல்களை செய்ய வழி வகுக்கும் செயல்களும் இங்கு அரங்கேற்றப்பட்டுள்ளது.பிறருக்கு துன்பம் விளைவிக்கும் ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்தாலும் ஒரு மனிதனை ஒரு மனிதனாக மதிக்கப்படுவது அவனுடைய ஒழுக்க நெறியை மிக மிக முக்கியமானது என்பதே உண்மை "சமுதாய வாழ்க்கையில் ஒழுக்கம் பக்தியைவிட முதன்மையானது இன்றியமையாதது. (பக் :239 பெரி.இ.எ) கலகத்தை ஏற்படுத்தும் சமயவாதிகள் மூடநம்பிக்கை செயல்களில் இருந்தும் கட்டுக்கதைகளிடமிருந்து மிகவிழிப்புணர்வோடு இருக்க வேண்டும் அப்போதுதான் நமக்கான அடிப்படை உரிமையும்,தேவையற்ற சமயத தாக்குதல்களையும் குறைந்துப் போகச் செய்து இயல்பான ஒரு மனித வாழ்க்கை வெளிப்படும் என்று மனிதனின் மீதான அவரின் உள்நோக்க பார்வையானது மிகத் தெளிவாக இருப்பது நாம் இங்கு அறிய முடிகிறது."மனிதர்களின் குறைபாடுகளையும் மூடத்தனத்தை காண்பதற்கேற்ப அவர் கூரிய பார்வையைப் பெற்றிருந்தார் அவற்றை அவற்றின் இழிந்த தன்மையும் முட்டாள்தனமும் தெளிவாகப் புலப்படும் வண்ணமும் விரிந்துரைக்கும் ஆற்றலும் அவரிடம்அமைந்திருந்தது" (பக்:14-வே-சுப்.ரெ) சமயங்களுக்குள்ளாக இருக்கும் நிலையற்ற தன்மையையும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட உள்ளடக்கு கட்டமைப்புகளையும் கட்டுடைத்து பேசுகின்றார் என்பது தெரியவருகின்றது

ஆட்சி நிலை:

ஒரு நாட்டின் மக்கள் எவ்வித துன்பமும் இன்றி வாழ்கின்றனர் என்றால் அவர்கள் நல்லாட்சியின் கீழ் இருப்பது உணரலாம் அதுவே ஒரு நாட்டின் மக்கள் பல்வேறு விதிகளுக்கு உட்பட்டு துன்பப்பட்ட வறுமை வாழ்க்கையோ உரிமையற்ற நிலையோ அனுபவித்து வாழ்ந்ததால் அங்கு சரிவர ஆட்சி முறைகளும் சமூக சூழலும் இல்லை என்று கூறலாம், வேமனாரின் காலத்திலும் சமூக அரசியல் நிலைமைகளும் மக்களுக்கு நன்மை தரும் வகையில் இல்லை என்றே கூறலாம்.அவர் வாழ்ந்த காலகட்டத்தில் நடுவணரசு மேலாண்மையில் உரிமை இல்லாமல் மக்கள் அலைந்து திரிந்தனர் அப்போது இருந்த சிற்றரசர்கள் ஆட்சியில்தான் மக்களும் அவர்களின் எண்ணமும் சிறைபட்டு போயினர் "நாடு சிறு சிறு பகுதிகளாகச் சிற்றரசர்களின் ஆட்சியிலிருந்தது. அவர்கள் மிகவும் ஆற்றில் அற்றவர்களாக இருந்தனர்." (பக்.52-வே-சுப்.ரெ)

பொது நலத்தை பற்றியோ மக்களின் வாழ்க்கையின் முன்னேற்றத்தை பற்றி யோசிக்காமல் சுயநலத்துக்காக மக்களின் உழைப்பை உறிஞ்சும் அட்டை பூச்சிகள் ஆகவே இருந்தன இப்படியான கொடுங்கோலாட்சி காரர்கள் தங்கள் மனம் போகும் போக்கில் நாட்டை வழி நடத்தினர். இதுபோன்ற மனப்போக்கு கூடிய கொடிய சுயநலகொடுங்கோல் ஆட்சியில் உயிருக்கும் மனித உடமைக்கும் பாதுகாப்பு என்பது இல்லை உறுதிப்படுகிறது அதையும் மீறி வெளிவரும் மக்களின் உயிரும் மானமும் இவர்களின் ஆளுகைக்குள் அகப்பட்டு நசுக்கி விடுகின்றன "இத்தகைய மனவுறுதியில்லாத கொடிய சிற்றரசர்களின் கொடுங்கோலாட்சியில் உயிருக்கோ சொத்துக்கோ பாதுகாப்பு இல்லை" (பக்.52-வே-சுப்.ரெ) இந்தப் போக்கானது மக்களை இயல்பாக வாழ விடாது பல பிரிவுகளாக ஒடுக்கப்பட்டு அடிமாடுகளாக நடத்தப்பட்டனர். இவர்களின் திட்டங்களில் எப்படியாவது மக்களை அவர்களுக்கு அடுக்கி ஆளுகை செய்யும் வழி இருக்க வேண்டும் என்று நினைப்பவர்களை தளிரிலே தகர்த்தெறிந்து விட்டு, அரசின் மக்களுக்கு கொடுக்கும் தண்டனைகளை மக்களின் கண்ணெதிரே செய்தனர். இவ்வாட்சிக்கு எதிரான பழிக்குப் பழி வாங்கும் எண்ணமும் சமூகத்திற்காக வாழும் எண்ணமும் யோசிக்க முடியாத அளவுக்கு நேரத்தை மிக கொடூரமானதாக மாற்றி அன்றாட நேரத்தை தங்களுக்காகவும் குடும்ப நலனுக்கு ஓடச் செய்தனர். இதுபோன்ற ஓட்டத்தில் கூட வாழ்வில் முன்னேற்றத்துக்கு ஏற்ப சிந்தித்து செயல்படும் ஆட்களை முன்னேற்றம் பெறவும்

வளர்ச்சியடையவும் முக்கிய இடங்களில் பணிபுரிபவர் விடுவதில்லை இப்படிப்பட்ட ஆட்சி காரர்கள் இவர்களைத்தான் வேமனார் "அதிகாரத்திலுள்ள மூடன் ஒருவன் தகுதியுள்ள அனைவரையும் வேலையிலிருந்து நீக்கி விடுகின்றான் "(பக்:52-வே-சுப்.ரெ)இதுபோன்ற சூழலில் வாழ நினைப்பதை மக்கள் பெரும் துன்பமாக நினைக்கின்ற பொழுது கலை கல்வி சுய இன்பங்கள் மீது அக்கறை கொண்டு வாழ்க்கையில் ஊக்கம் பெறுவதற்கு இடமில்லாமல் போய்விடுகின்றது "மக்கள் பசியால் வாடுகின்றனர் கலைகளும் கைத்தொழில்களும் எங்கனம் செழிக்க முடியும்? கல்வியில் வளர்ச்சி எங்கனம் காணமுடியும்?சுடுநீர் தங்க முடியும்?"(பக்:52-வே-சுப்.ரெ) மக்களின் உணர்வினையும் உரிமையையும் சரிவர நிலைநிறுத்த விடவில்லை என்றால் அவர்களின் முன்னேற்றமும் கேள்விக்குறியாகி விடும்இதன் விளைவாக நாடும் நாட்டு மக்களின் முன்னேற்றம் வளர்ச்சியும் அடையாமல் போவதற்கு அந்த நாட்டின் நல்ல ஆட்சி முறை இன்மையின் காரணமாகத்தான் அமைந்துவிடும் .

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின் " (தி.கு:560) இத்தகைய இருள் சூழ்ந்த நலிவுற்ற காலத்தில்தான் வேமனார் வாழ்வு இருந்தது. மக்களின் வெளிவர முடியாத சிறை நிலையை கண் கூட கண்டு மனம் கலங்கிய வேமனார் மக்களின் துயரத்தை பொறுக்கமுடியாத ஒற்றை தனிநபராக தன் கருத்துக்களால் எதிர்த்து நின்று கேள்வி எழுப்பியும் கடுஞ்சொற்களை கொடியவர்கள் மேல் கண்டிப்பாகவும் கடுமையானதாகவும் தன் உள்ளக் குமுறல்களை கொட்டி தீர்க்க முற்பட்டார்.ஆனால் எதிரிகளால் பலதரப்பட்ட இன்னல்களையும் இழிவு பட்டப் பெயர்களையும் ஏற்று பொறுமையுடன் தன் மக்களின் துயர்த்துக்கான தீர்வினை தேடி அலைந்து திரிந்தஇவரை "வாய் வீச்சுக்காரன் "என்றும் "பித்தேறி கிறுக்கன்" என்றும் அவர் மீது வீசப்பட்ட பட்டப் பெயர்களை பொருட்படுத்தாது தன் காலத்திய மக்களின் இழிவு நிலையை எதிர்த்து பொது நலத்திற்காக ஒடும் சீர்திருத்தவாதியாகவும் உண்மையைத் தேடி அறியும் ஒரு கேள்வியாகவும் ஒரு கவிஞராய் அலைந்து திரிந்தார்.

வாழ்க்கையின் தத்துவ நிலை:

வேமனாரின் கவிதை எளிமையாகவும். இனிமையாகவும், வாழ்க்கை மீதான ஒரு எண்ணத்தை தெளிவுப்படுத்துவதாகவும் இருக்கின்றது. வேமனார் தன்னுடைய வாழ்க்கையே ஓர் ( எ-கா) காட்டி மக்களை வழிநடத்தி சென்றுள்ளார். துன்பம் வந்து போது மனிதர் தன் வாழ்வில் ஏன்? எதற்கு? எப்படி? வந்தது என்று மீண்டும் மீண்டும் அப்பாதையின் தன்மை அறிந்து பயணித்து அதற்கான நிரந்தர தீர்வு காண வழி காண்பது முக்கியம். கடுந்துயரமான இறுகுமனான மன உடைந்த நேரத்தில் தெளிந்த எண்ணமும் பொறுமையாக அதனை செயல்படுத்தும் மன வலிமையோடும் பயணித்து மக்களை அவ்வாறு நெறிப்படுத்த முற்படுவதே நல்ல படைப்பு என தன் வாழ்க்கை நிலையிலிருந்து காட்டினார்."வேமனருக்கு வாழ்க்கை மென்மையான வழியாக அமையவில்லை; அது பல்வேறு மேடு பள்ளங்களையும் அபாயகரமான முடக்குகளையும் கொண்ட கரடு முடமான சாலையாகவே இருந்தது." (பக்:46-வே-சுப்.ரெ)பிறருக்கு வாழ்க்கை மீதான உபதேசம் மட்டுமே செய்யாமல் அதனை எப்படி ஆக செயல்படுத்த வேண்டும் வாழ்க்கைக்கான தேடுதல் என்ன? அதில் வெற்றி என்ன ? என்று அதனை தெளிவுபட எடுத்துக் கூறியவராக இருக்கின்றார்."அவர் வாழ்க்கையை நேரடியாக கண்டவர். அவர் வாழ்க்கையை பற்றி வேடிக்கையாக பேசினார்; கேலி ; வாழ்க்கையைக் கண்டு இகழ்ச்சியாக சிரித்தார்; அதனோடு அதனைப் பற்றியும் எள்ளி நகையாடினார். " (பக்:38 -வே-சுப்.ரெ) இவர்க்குள் அமைந்திருந்த வாழ்க்கையின் மீதானஉயர்வு எண்ணங்களை வெளிப்படையாக காட்டி வாழ்க்கை வாழ்வதும் வாழ்ந்து காட்டுவதுமே மனித வாழ்க்கை என நினைத்து ஒவ்வொருவரும்தங்களை ஒழுங்குபடுத்தி நிலைப்படுத்தி வாழ்க்கையின் நுணுக்கத்தை அறிந்து அதற்கான தேடுதலில் தங்களுடைய வாழ்க்கையை உள்ளடக்கி வாழ வழி வகுத்து காட்டுகின்றார்

வேமனாரின் நோக்கமும் கோட்பாடுகள் மீதான எதிர்ப்பும்:

மனிதநேயத்தை இழந்து வாழும் மனிதர்களுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளையும் குறைபாடுகளையும் நீக்கி மனிதநேயத்தை மக்களுக்கு கற்றுவிக்கும் பணியை முதலாக எடுத்துச் செய்து பின்பு அடுக்கதிகார சமூகக் கட்டமைப்புகளையும் அவர்களால் உண்டக்கப்படும் உரிமையின்மைகளையும், இன்னல்களையும், கொடுமைகளையும்

*தகர்த்தெரிந்து மக்களுக்கான இயல்பான ஒரு சாதாரண சமத்துவ வாழ்க்கையை கிடைப்பதற்காகவே பேராடி தன்னுடைய கவிதைகளை வெளிக்காட்டினார். மக்களின் வாழ்வின் வழிகாட்டியான இவரின் கவிதை சதாரண கவிதைகளைப் போல வர்ணனைகளும் அதிகம் பெறாமல் ஒரு அடிபட்டு ஒடுக்கப்பட்ட ஒரு வீரனின் கூக்குரலாகி தான் இவர் கவிதை தொகுப்பு அமைந்திருந்தது."ஒரு கலைஞரைப்போல் இன்றி ஒரு வீரனை போலவே அவர் சொற்களை கையாளுகின்றார்" (பக்:65-வே-சுப்.ரெ) தவிர பணத்துக்காகவோ இல்லை அரசனை போற்றி பொருள், நிலம், செல்வம் கிடைப்பதற்காகவோ எந்த பாடலும் கருத்துக்களும் அவர் எழுதவில்ல அவரின் நோக்கமே மூடநம்பிக்கையால் ஏற்படும் கொடுமைகளையும் இயல்பான ஒரு சமுதாய வாழ்க்கைகளை மக்கள் வாழ முடியாத நிலைமையிருந்து அவர்களை விடுவித்து மனிதநேயத்துடன் வாழவழி செய்வதற்காகவே தன்னுடைய கருத்துக்களை முன்வைத்து ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாக செயல்பட்டார். தன்னுடைய சீர்த்திருத்தக் கருத்துக்கள் எளிதாக அறியாத கீழான மக்களிடம் கொண்டு செல்லவே நினைத்தார்."புதிய தொடர் மொழிகளையும் மரபுத் தொடர்களையும் புதிதாக உண்டு பண்ணும் தனி திறமையும் பெற்றிருந்தார் அவர் சுருக்கத்தையும் பொருள் செறிவு தொடர்களையும் கையாள்பவர்" (பக்:16 -வே-சுப்.ரெ)*

*தங்களின் வாழ்க்கையின் உண்மை தன்மையில் புரிதல் ஏற்பட்டு தங்களுக்கான நிலையான ஒரு அடிப்படை இடத்தைப் பிடித்துக் கொள்வர் . படைப்பு உயிர் உள்ளதாக இருந்தால் மட்டுமே அது பிறருக்கு பயன் அளிப்பதாக இருக்கும் வேமனாரும் தன்னுடைய படைப்புகளின் கருத்தும் ஒரு உயிர் பெற்று சமூகத்தில் சமத்துவத்தை உயிர்பித்து சமூகத்தில் அது நிலையான ஒரு நிம்மதியை பிறவிக்கும் என்று நம்பினார். சமுதாயத்தின் ஒற்றுமையை நிலைநாட்டவே தன்னுடைய சொல்வளத்தை ஒரு புதுமையை புகுத்தி மக்களை ஈர்க்கும் வண்ணமும் எளிய மையாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணமும் அதை இருக்கச் செய்தார்."அவர் புலவர்களுக்காக எழுதவில்லை; ஆனால் எளிய கல்வியறிவு இல்லாத கிராம மக்களுக்காக எழுதினார்"(பக்:14-வே-சுப்.ரெ) ஆனால் இதன் விளைவாக இவர் மீதும் இவர் படப்பின் மீது மிகப்பெரிய தாக்குதல்களையும் கட்டுக்கதைகளையும் உருவாக்க இதுவே ஒரு காரணமாக அமைந்தது. "கோமட்டி வேமர் பழிவாங்கும் பேயாக மாறி தொடர்ந்து அஞ்சத்தக்க பேரிழப்புகளை அவர் அடையுமாறு செய்தார்". ( பக்:21-வே-சுப்.ரெ)தன் மீதான வெறுப்பினை எதிரிகள் எப்படி காட்டினாலும் அதனை எல்லாம் பொருட்படுத்தாமல் தனக்கான உண்மை நோக்கத்திற்காக ஓடி அறிந்தவராக இருந்தார் அவரின் தலையாய கொள்கையான 'ஒருவனே தெய்வம்' என்ற கொள்கையை வழி எடுத்துக் கூறுவதில் மிக அழுத்தம் பெற்றவராக கூறுகின்றார் ஏனெனில் சமயத்தால் ஏற்படுகின்ற கொ டுமைகளும் இன்னல்களும் பலதரப்பட்ட மக்களை கீழ்நிலையிலிருந்துமேல்நிலைக்கு வரவிடாமல் செய்வதற்கு இதுவே ஒரு வழியாக அமைகிறது."இனங்களும் சமயங்களும் வேறுபட்டவை; ஆனால் பிறப்பு ஒன்றே மலர்கள் வேறுபட்டவை; ஆனால் வழிபாடு ஒன்ேற மெய் விளக்கத்துறைகள் வேறுபட்டவை ;ஆனால் தெய்வம் ஒன்றே என்று மொழிகின்றார் வேமனார் " (பக்:81இந்.ஒ.ஆ)*

*உருவ வழிபாட்டை கண்டிப்பதும் அதனுள் அடங்கி இருக்கும் வழிமுறைகளையும் அடக்கு அடித்தளங்களை தகர்த்தெறிவதே தன்னுடைய முதல் நோக்கம் கொண்டு செயல்பட்டார்.. ஆளுமைகளையும் அதிகாரங்களையும் தங்கள் கட்டுக்குள் வைத்திருந்த மேல்தட்டு வர்க்கதார் என்று கூறப்படுபவர்கள் வேமனார் மீது மிகப்பெரிய வெறுப்பையும் அவரை ஒழித்துக்கட்டும் முடிவினையும் வைத்திருந்தனர் இதன் விளைவாகவே அவரையும் அவருடைய படைப்புகளையும் வெளிவராமல் அது வெளிவந்தால் மக்கள் குழப்பமும் விழிப்புணர்வு ஏற்பட்டு தங்களின் கட்டுக்குள் ஆக இருந்து அவர்கள் வெளிப்பட்டு விடுவார்கள் என்ற பயத்துடனே அதற்கான வழிகளை தேடி அதனை நடைமுறைப்படுத்தி வெற்றி காணவும் தொடர்ந்தனர்."வேமனாரின் பாடல்கள் நீதி சமய அங்கதப் பகுதி என்ற தொகுப்பு நூலின் முதல் பதிப்பின் 500 படிகள் 450 படிகளில் எவருமறியாமல் மறையும் அளவுக்கு சூத்திர கவிஞர்களின் மீது உயர் வகுப்பினர் சார்ந்த மக்கள் வெறுப்பு கொண்டிருந்தனர் " (பக்:08-வே-சுப்.ரெ) இதன் விளைவே சில காலமாக அவர் நூல்களும் நூலின் தன்மையும் மக்களுக்கிடையே காணப்படாது போய் கட்டுக்கதைகள் உருவாக காரணமாக அமைந்தது.*

*உண்மை வெளிப்பாடு:*

*காலம் என்பது ஒன்று போலவே இருப்பது இல்லை மாறிக் கொண்டே இருப்பதாகும். இந்தியாவில் சாதி சமய சூழலும் அதுபோலத்தான் பல மாறுதல்களைக் கண்டு வந்த தருணத்தில் வேமனார் மீதான ஆய்வு வேமனாரின் படைப்பின் மீது மௌனம் காத்து பொய்களையும் கட்டுக்கதைகளையும் உருவாக்கிய தெலுங்கு இலக்கிய உயர்மட்ட புலவர்களுக்கு அது சிக்கலான சூழலை உருவாக்கியது என்பது புலனாகிறது. " அவருடைய ஆளுமை மிகத்துடிப்பு உடையதென்றும், அது சிதைக்க முடியாத அளவுக்கு மிக்க ஆற்றலை கொண்டது என்றும் தெலுங்கு இலக்கிய தலைவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று"(பக்:16-வே-சுப்.ரெ)இயற்கையாகவே நல்லறிவும் மக்களுக்கு ஒளிர்விடும்சிறந்ததொரு பாதையையும் நல்ல நோக்குடனும் பற்றுடனும் செயல்பட துடிக்கும் புதுமை பெற்ற வேமனார் இவர் மீது பொய் கருத்துக்களை தவறான எண்ணங்கள் , கட்டுக்கதைகள் என பல அடுக்குகள் உண்மையை மூடி மூடி மறைத்தாலும் வேமனார் போன்ற சீர்திருத்தவாதிகளின் கவியும் கருத்தும் பேராற்றல் வாய்ந்தாக எதிரிகளின் தாக்குதல்களை நிற்க முடியாத அளவுக்கு நிலைப் பெறச் செய்கிறது."வேமனாரின் சிந்தனையை வெறுப்பவர்கள் கூட அவருடைய கவிதை சொல் வளம் இணையற்றது என்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்" (பக்:56-வே-சுப்.ரெ) உள்ளத்து உணர்வினை மிகச் செம்மையாக துடிப்புடன் வழிப்படுத்தும் அறிவுக்கூர்மையும், தெளிவாக எடுத்துரைக்கும் நுண்ணறிவும் கொண்ட வேமனார் சமுதாய மாற்றத்திற்கான ஒரு வரவு என்றே கூறலாம்"உண்மையிலே படைப்பு கற்பனையிலும் சொல் திறனிலும் நகைச்சுவையிலும் முன்மாதிரியிலும் துணிவாகக் கூறுவதிலும், மூடப் பழக்கங்களை அப்பட்டமாகத் திறந்து காட்டும் திறனிலும் பாகங்களை வெளிப்படுத்திக் காட்டுவதிலும் வேமனர் தெலுங்கு இலக்கியத்தின் தலைசிறந்தவராக திகழ்ந்தார் " (பக் 16-வே-சுப்.ரெ )இதன் வெளிப்பாட்டில் தலைசிறந்த பல சீர்திருத்தவாதிகளில் தத்துவவாதிகள் போலவே இவரும் மக்களுக்கு தேவையான அரிய செய்திகளையும் கருத்துக்களையும் சமூகத்தை மாற்றியமைக்கும் சீர்திருத்தக் கருத்துக்களையும் கூறியுள்ளார் என்பது பல சான்றுகள் மூலம் கிடைக்கிறது."கிரேக்க மொழிக்கு லூசியன் எப்படியோ அப்படியே தெலுங்கு இலக்கியக்த்திற்கு இந்த நூல் ஆசிரியர் ஆவார்" (பக்:12வேம.பாட..பிரெ) என்று பிரௌன் கூறினார்.இந்த பிரௌன் என்பவரின் மூலமே வேமனார் என்றொரு சீர்திருத்தக்கவிஞர் பற்றிய செய்தி நமக்கு இங்கு மிகப்பெரிய பொக்கிஷமாக கிடைக்க காரணமாய் இருந்தது. " அவர்தான் முதன் முதலாக வேனாரின் கவிதைகளை சேகரித்து ஒத்துப் பார்த்து ஒழுங்குப்படுத்தி அச்சிட்டு வெளியிட்டார்" (பக்:12-வே-சுப்.ரெ)சிறைப்பட்ட மக்களுக்கு சிறகு கொடுத்து உயரப் பறக்க செய்தார் என்பது இவர்களின் தேடுதலின் விளைவாக தான் நமக்கு கிடைத்துள்ளது.*

*சுப்புரெட்டியாரின் மொழிபெயர்ப்பு திறன் பிரதி வெளிப்பாடு:*

*சுப்புரெட்டியாரரின் மிகப்பெரிய மொழிபெயர்ப்பு இத்தொகுப்பின் வழியாக சீர்திருத்தக் கருத்துகளை மிகத் தெளிவாகவேமனரர் வாழ்ந்த காலத்தை அவருடைய வாழ்நாள் காட்சி நிலையோடு அப்படியாக இங்கு வெளிப்பட காரணமே சுப்புரெட்டியார் இன்சொல் திறனும் , கூர்நோக்கு பார்வையும் , மொழிபெயர்ப்புத் திறன் அறிவில் சிறந்த பயிற்சியின் மூலமாக அடைந்த மொழிபெயர்ப்பின் பயனேயாகும்.வேமனார் வாழ்க்கை பற்றியும் பொதுநலபோக்கும் சிறந்த சொல்வள பயன்பாட்டு தன்மையும் புதுமையாக வெளிக்காட்டும் திறனும் பெற்று இருக்கின்றார் என்பது இங்கு நன்கு புலனாகிறது. மொழி பெயர்ப்பு என்று கூற முடியாத அளவுக்கஉரிய விதிகளை கையாட்டு விளக்கிக் காட்டியுள்ளார். சுய கொளகைகளோ, கற்பனைகளையோ, கலக்காது அப்படியே வேமனாரின வாழ்வியலை தன் மொழிபெயர்ப்பு படைப்பு வழி சுப்புரெட்டியார் தெளிவுப்பட தனித்ததுவத்துடன் எடுத்துரைத்துள்ளார். இப்படியான படைப்புக்கு முக்கியமான காரணம் வேமனாரின்கவிதைத்திறன் வெளிப்பாடுதான். " அவர் தம்முடைய கவிதைப் படைப்பில் தம்முடைய காலத்தை முழுமையாக பிரதிபலித்தார்" (பக்.47-வே-சுப்.ரெ)தன்னுடைய வாக்கியத்தின் அமைப்பிலும் கூட தனித்துவத்தை புகுத்தி உணர்ச்சிமிக்க சொல் எழுச்சிமிக்கதாக்கி சொல் வேகத்தை ஓடவிட்டு தன் கருத்தில் கொண்டிருக்கும் வேமனரின் பன்முகத்தன்மைஉணர்ச்சி வெளிப் பாட்டினை வரைதல் போலவே காட்டி இருக்கின்றார் சுப்புரெட்டியார் அவரது மொழிபெயர்ப்பு திறனில் "வேமனர் ஒரு கணநேரத்தில் சாந்தமாகவும் அடுத்த கணநேரத்தில் கடுமையாகவும் மூன்றாவது கணநேரத்தில்*

குறும்புத்தனம் உடையவராகவும் இருப்பார் " *(பக்:85-வே-சுப்.ரெ)*சிறந்த மொழிப்பெயர்ப்பை தந்துள்ள இவரின் படைப்பின் வழியே இதுபோன்ற அரிய சீர்திருத்தக் கருத்துக்கள் நமக்குஇப்படியே இந்த காலத்துக்கு ஏற்ப ,எந்த சூழ்நிலைக்கேற்பவும் அவை பயன்படும் வகையில் அவரின் கருத்துக்கள் கிடைக்கப்பெறசுப்புரெட்டியார் இன் மொழிபெயர்ப்பை காரணமாக இருக்கின்றது.

எண்ணற்ற கட்டுக்கதைகள் அவர் மீது கட்டப்பட்ட இருப்பினும் அவருடைய சீர்திருத்தக்கொள்கை பெற்ற கவித்திறன் ஆனது உண்மையான அவரின் கொள்கைகளை வெளிப்படுத்தி காட்டுவதாக அமைந்திருந்தது அப்படிப்பட்ட கொள்கைகளை பல தரப்பட்ட மொழியின் மொழிபெயர்ப்பே உலக மக்கள் அனைவரும் அறிய காரணமாக இருக்கின்றது . சுப்புரெட்டியார் போன்ற ஆய்வாளர்களால் மட்டுமே இன்றைய காலகட்டத்தில் அவருடைய செல்வாக்கு கடைக்கோடி மக்கள் வரையும் அறிவதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது.சேகரிக்கும் முறையும் சரியான தரவுகளின் வழியே அவரின் பொய்கள் நீக்கி உண்மை வெளிப்பட காரணமாக அமைந்தது. இதன் வெளிப்பாடே ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பு தன்மையிலும் இது வெளிப்படவும் காரணம் இன்று அனைத்து கடை கோடி மக்களும் இவரை அழிவதற்கு காரணம் இதுவே உள்ளது. அறியாத பலதரப்பட்ட மொழி மக்களுக்கு வேனாரின் தனித்துவத்தை பலதரப்பட்டசெய்தி வழியாக சுப்புரெட்டியார் இந்த தமிழ் மொழிப்பெயர்ப்பு தமிழ் இலக்கியச் சூழலுக்கு மிகப்பெரிய ஒரு வரமாக அளித்துள்ளார் என்றே கூறலாம்.

முடிவுரை

மனித இனம் தோன்றியது ஒரே நிகழ்வு தான் அவன் வாழ்நாளில் பல தரப்பட்ட சூழ்நிலைகளில் பலதரப்பட்ட நிலைகளையும் ஏற்படுத்திக் கொண்டதன் விளைவே அவனுக்கும் துயரங்களும் வர காரணம். இன்பமுடன் மக்கள் வாழ "ஒற்றுமை""ஒருமை"என்பதே ஒரு வழியாக இருக்கும் என்று கூறுவதே இவரின் கருத்தினில் உண்மையை வழிகாட்டி இவ்வுலகத்திற்கு மாமனாரின் உயர் தன்மையை தமிழ் மொழிபெயர்ப்புதிறன் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார் சுப்புரெட்டியார் . அடுக்கடுக்காக காணப்படும் சாதிய சமய வேறுபாடுகளும் அவர்களின் ஆதிக்க அடக்கு முறைகளையும் வறுமை நிலையையும் சரியான ஆட்சி முறைகளையும் என்ற அனைத்து நிலைகளிலும் மக்களுக்கு நன்மையை விளைவிக்கும் கருத்தினையும் அவர் எக்காலத்துக்கும் ஏற்புடையதாக எடுத்துக்காட்டியுள்ளார்.

துணை நூற்ப்பாட்டியல்


1.இந்து ஒழுக்கங்கள், பழக்கங்கள், ஆச்சாரங்கள் (ஜே.ஏ பாய்ஸ் ஆக்ஸ்போர்டு) *1953* புதிய பதிப்பு

2.உடைந்து நொறுங்கிய நாகரிக மாற்றத்தின் காலத்தில் சாதிய சமூகம் (சசிகலா மொழிபெயர்ப்பு) லேன்ஸி பெர்ணான்டஸ் சத்தியஜித் பட்கல் சென்னை சவுத் விஷன் *2001*

3.திருக்குறள் -தெளிவுரை நாமக்கல் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை தென்றல் நிலையம் *12* ,மேல் சன்னதி சிதம்பரம் *-60 80 01*

4.பெரியார் இன்றும் என்று (பெரியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்) விடியல் பதிப்பகம் ,உப்பிலிபாளையம் ,கோயம்புத்தூர்- *641015*

5.மூலதனம் - காரல் மார்க்ஸ் அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு(முதல் பாகம் ) தியாகு தமிழ்ப் மொழிப்பெயர்ப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் .சென்னை

6.வேமனர் - டாக்டர் சுப்புரெட்டியார்- தமிழ் மொழிபெயர்ப்பு

7.வேமனரின் பாடல்கள்-*493* பாடல்கள் மொழிபெயர்ப்பு வி.ராமசாமி சாஸ்திரிலு அண்ட்சன்ஸ்சென்னை *1911* புதிய பதிப்பு


*References*


*1.Hindu Olukangal, Palakkangal, Aacharangal ( J.A Boys Oxford) 1953 New Print*

*2.Udainthu Noruingiya Nagareega Maatrathin Kalathil Saathiya Samugam ( Translated by Sasikala) Lancy Fernandes Satyajit Patkal, Chennai South Vision 2001*

*3. Thirukkural - Thelivurai, Namakkal Kavinjar V.Ramalingam Pillai, Thendral Nilayam 12, Mel Sannathi, Chidambaram - 608001*

*4.Periyar Indrum Endrum ( Periyaarin theirnthu Edukapatta Katturaigal) Vidiyal Publication , Uppilipayalam Coimbatore 641015*
*5.Moolathanam - Karl Marx Arasiyal Porulathara Vimarsana Paguppaivu ( Part I) Tamil Translation by Thiyagu,New century Book house Private Limited - Chennai*
*6.Vemanar - Dr. Subbu Reddiyar - Tamil Translation*
*7.Vemanarin Padalgal - 493 Padalgal Translated by V. Ramasamy Sathirilu And sons*
*Chennai 1911 New Print*

*நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author's Contribution Statement: இல்லை / NIL*

*கட்டுரையாளர் நன்றியுரை / Author'S Acknowledge : இந்த தலைப்பில் கட்டுரை எழுத அனுமதியளித்த ந சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என் நன்றி உரித்தாக்கு./ I would like to express my gratitude to the Na Subbu Reddiar 100 Educational Trust for allowing me to write an article on this topic.*

*கட்டுரையாளர் உறுதிமொழி / Author's Declaration: இக்கட்டுரையில் எவ்விதமான முரண்பாடுகளும் இல்லை என நான் உறுதியளிக்கிறேன்./ I declare that there is no competing interest in the content and authership of this scholarly work.*

இக்கட்டுரை கிரயேடிவ் காமன்ஸ் ஆட்ரிபியூஷன் *4.0* வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.*/ The content of the article is licensed under creative commons attribution 4.0 International license*

********* ********* ********** ********* ********* ********** ********** **********